MARCH 2025 |VOL.2, ISSUE NO. 3

RMRL NEWSLETTER

A monthly bulletin of RMRL to educate, interpret, and inform

The city gate of Tranquebar , Photo: Wolf Wachner, 2005

தமிழ் அச்சுப்பண்பாட்டு வரலாற்றில் ஃப்ராங்கே நிறுவனம்

முனைவர். சுந்தர் கணேசன், இயக்குநர் (RMRL)

முதன்மைச் சொற்கள்: ஃப்ராங்கே, சீகன்பால்கு, ஜெர்மனி, அச்சுப் பண்பாடு, ஹாலே

தமிழ் ஆவணங்களைப் பாதுகாக்க கடந்த 30 ஆண்டுகளாக உலகின் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். அவற்றுள் ஜெர்மனி, ஹாலேவைச் சேர்ந்த ஃப்ராங்கே நிறுவனம் முக்கியமான ஒன்றாகும்.

1706ஆம் ஆண்டில் டென்மார்க்கின் மன்னர் நான்காம் ஃப்ரெட்ரிக்கின் நிதி நல்கையின்கீழ் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த லூதரன் இறைப்பணியாளர்களான பார்த்தோலோமேயஸ் சீகன்பால்கு மற்றும் ஹென்ரிக் ப்ளுட்ஷே ஆகியோரின் தலைமையில் தமிழ்நாட்டின் தரங்கம்பாடியில் 'தரங்கம்பாடி மிஷன்' தொடங்கப்பட்டது. 1712ஆம் ஆண்டு, இங்கிலாந்திலுள்ள SPCK நிறுவனத்தின் உதவியுடன் ஒரு அச்சு இயந்திரம் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. சீகன்பால்கு தமிழ் மொழியை ஆழமாகக் கற்றுக் கொண்டு 1713ஆம் ஆண்டு, 'அக்கியானம்' எனும் நூலை முதன்முதலில் தமிழில் வெளியிட்டார்.

தரங்கம்பாடி மிஷன் கிறித்தவச் சமயப் பணிக்கு மட்டுமல்லாமல் தமிழ் மொழியிலும் அதன் அச்சுக்கலை வளர்ச்சியிலும் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இங்கிருந்து இந்தியாவின் பல இடங்களுக்கு அச்சுப்பண்பாடு பரவியது.

தமிழரின் சமயம், வாழ்வியல், பண்பாடு ஆகியவற்றைப் புரிந்து கொண்டு தமிழ் மொழியில் கிறித்துவத்தைப் பரப்புதலே சிறந்த வழி என்பதை சீகன்பால்கு உணர்ந்தார்.



அக்கியானம், 1713

அதன்படி தமிழ்நாட்டில் தனது சமயப் பணியின்போது, சுமார் 160க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளைக் கண்டார். அவற்றை சைவ, வைணவ இலக்கியங்கள், அற இலக்கியங்கள், தத்துவங்கள், இஸ்லாமிய இலக்கியங்கள் என்று வகைப்படுத்திப் பட்டியலிட்டுப் பதிவு செய்துள்ளார். இது 'பிபிலியோத்திக்கா மலபாரிக்கா' (Bibliotheca Malabarica) என்றழைக்கப்படுகிறது. சீகன்பால்குவின் மறைவிற்குப்பின் அவரின் அச்சுப் பதிப்புகள் ஜெர்மனிக்கே கொண்டுசெல்லப்பட்டன.

2012ஆம் ஆண்டு 'பிபிலியோதிக்கா மலபாரிக்கா' நூலைச் செம்மையாக்கம் செய்து அதன் திருத்திய பதிப்பை வில் ஸ்வீட்மேன், ஆர். இலக்குவன் ஆகியோர் வெளியிட்டனர். சீகன்பால்கு தமிழில் கண்ட நூல்களை எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதையும், அதன் ஐரோப்பிய கண்ணோட்டத்தையும் இவர்கள் தங்களது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டு ஃப்ராங்கே நிறுவனம், சீகன்பால்கு வருகை தந்து 300 ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தமிழ்நாட்டில் கொண்டாட விரும்பியது. இந்நிகழ்வை ஒரு மதச்சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து நடத்த நினைத்தது. அதன்படி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தை தேர்வுசெய்தது. இரு நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி முதலில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் சீகன்பால்கு வருகையின் 300ஆம் ஆண்டுவிழா ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில்தான் முதன்முதலாக கொண்டாடப்பட்டது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இந்நிகழ்வில் சென்னையில் உள்ள ஜெர்மன் நாட்டுத் துணைத் தூதர் உட்பட பல ஜெர்மானிய, இந்திய ஆளுமைகளும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வு இருநாட்டின் அச்சுத்துறை வரலாறு மற்றும் வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இந்தக் கண்காட்சி பின்னர் தரங்கம்பாடியில் நிரந்தரமாக வைக்கப்பட்டது.

அதற்குப் பின்னர், 2012 நான் ஃப்ராங்கே நிறுவனத்தின் அழைப்பை ஏற்று ஹாலேவிற்குச் சென்றிருந்தேன். தமிழ் அச்சுப்பண்பாட்டின் தொடக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு ஹாலே மிக முக்கியமான இடமாகும். அங்கு சீகன்பால்கு மற்றும் மார்ட்டின் லூதர் ஆகியோரின் கையெழுத்துப் பிரதிகளைக் காண்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. சுமார் 700 முதல் 800 தமிழ் அச்சுப் பிரதிகள் அங்கிருந்தன. அங்கிருந்த தேவாலயங்களைக் கண்டபோதுதான் அவர்கள் தமிழ் ஆவணங்களையும் அச்சுப்பிரதிகளையும் தவறாக சமஸ்கிருதம் என்ற பெயரில் காட்சிப்படுத்தியது தெரியவந்தது. ஹாலே எனும் சிறிய இடத்திலேயே இப்படி ஏராளமான தமிழ் அச்சுப் பிரதிகள் காணப்படுகின்றன என்றால் ஜெர்மனி முழுவதும் எவ்வளவு அச்சுப்பிரதிகள் இருக்கும் என்று சிந்திக்கக் தூண்டுகிறது. அங்கிருந்து தமிழ்நாட்டிற்குத் திரும்புகையில் தமிழில் வெளிவந்த 'அக்கியானம்' என்ற நூலின் முதல் பிரதியின் நகலை ஃப்ராங்கே நிறுவனம் எனக்கு அன்பளிப்பாக அளித்தது.

ஃப்ராங்கே நிறுவனத்திற்கும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி ஹாலேவில் உள்ள தமிழ் அச்சுப் பிரதிகளை எண்ணிமப்படுத்தவும் அதற்கான நிதியை ஏதேனும் ஒரு நிறுவனத்திடம் பெறவும் முடிவெடுக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இருதரப்பினருக்கும் இடையேயான உறவைப் பேணவும் உறுதியெடுக்கப்பட்டது. மேலும், ஃப்ராங்கே நிறுவனத்திடமுள்ள தமிழ் ஆவணங்களை உள்ளடக்கிய ஒரு நூற்பட்டியலை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் தயாரித்து வழங்கியது. இத்தகைய அறிவுப் பரிமாற்றங்கள் தமிழ் அச்சுப்பதிப்பு வரலாற்றின் தொடக்கத்தையும், தமிழ்நாட்டிற்கும் ஐரோப்பிய ப்ரோட்டஸ்டன்ட் இறைப்பணியாளர்களுக்கும் இடையேயான பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் கண்டறிய உதவின. அச்சு பண்பாட்டை அறிவதற்கு ஜெர்மனியில் உள்ள பல்வேறு நிறுவனங்களுக்குச் சென்று கள ஆய்வை மேற்கொள்வது பலனளிக்கும்..

குடி அரசின் நூற்றாண்டு

ஆர். விஜயசங்கர், இயக்குநர், ஆராய்ச்சி மற்றும் பதிப்புத் துறை (RMRL)

முதன்மைச் சொற்கள்: குடிஅரசு, பத்திரிகை, பெரியார், திராவிட இயக்கம், தமிழ்நாடு

ஈ.வெ.ரா. பெரியார் அவர்களால் 1925இல் துவங்கப்பட்ட குடி அரசு இதழ் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் அரிய சேகரிப்புகளில் ஒன்று. குடி அரசு இதழின் நூற்றாண்டு இது.

திராவிட இயக்கம் என்கிற சமூக, பண்பாட்டு இயக்கம் ஒரு நூற்றாண்டையும் தாண்டி பல பரிமாணங்களைப் பெற்று ஒரு அரசியல் இயக்கமாக உருவாகி தமிழகத்தின் ஆட்சி அதிகாரத்தில் ஓர் அரை நூற்றாண்டு காலம் உறுதியாக அமர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் தோன்றிய முற்போக்கு இயக்கங்கள் தேங்கி நிற்கும் போது திராவிட இயக்கம் வலுவாகத் தொடர்வதற்கு முக்கிய காரணம் அதன் ஆரம்ப ஆண்டுகளில் சமூக நீதி, மொழியுரிமை, மாநில உரிமை, தமிழ் தேசிய இன உரிமை, பகுத்தறிவு போன்ற அடிப்படைக் கொள்கைளுக்கான ஒரு வலுவான அடித்தளம் அமைக்கப் பட்டதுதான். அந்த அடித்தளத்தை அமைத்த பெருமை ஈ.வெ. ரா. பெரியார் அவர்களையே சாரும்.

மாகாண காங்கிரஸ் தலைவராக இருந்து காந்தியின் கொள்கைகைளைத் தீவிரமாகப் பரப்புரை செய்த பெரியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு என்கிற கோரிக்கையை தேசிய இயக்கம் முன்வைக்க வேண்டுமென நினைத்தார். அந்த எண்ணத்தை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாததால் அக்கட்சியிலிருந்து வெளியேறினார். 1921 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த எஸ். ராமனாதன் சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்பி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென காங்கிரஸிலிருந்து வெளியேறிய பெரியாரை அழைத்தார். அழைப்பை ஏற்ற பெரியார் திராவிட இயக்கக் கொள்கைகளை தமிழ் மக்களிடையே நூற்றுக் கணக்கான கூட்டங்கள் வாயிலாகக் கொண்டு சேர்த்தார். திராவிட இயக்க வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றிய அச்சு ஊடகத்தையும் கையிலெடுத்தார். குடி அரசு என்கிற வார இதழை மே 2, 1925 அன்று தன் சொந்த ஊரான ஈரோட்டில் துவங்கினார். கே.எம். தங்கப்பெருமாள் பிள்ளை அதன் ஆசிரியர். ஆரம்பத்தில் வாரந்தோறும்

ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு அணா விலையில் 16 பக்கங்களுடன் குடி அரசு வெளியிடப்பட்டது.

குடிஅரசு இதழின் நோக்கத்தை அதன் முதல் இதழிலேயே வரையறுத்து இவ்வாறு கூறினார்: "நமது நாடு அரசியல், பொருளியல், சமூகவியல், ஒழுக்கவியல் முதலிய எல்லாத் துறைகளிலும் மேன்மையுற்று விளங்கச் செய்ய வேண்டும். நாட்டு மக்களின் உடல் வளர்ச்சிக்காவும் அறிவுவளர்ச்சிக்காகவும் கலை வளர்ச்சிக்காவும் மொழி வளர்ச்சிக்காவும் இதன் மூலம் உழைத்து வருவோம். ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். இதை அறவே விடுத்துத் 'தேசம், தேசம்' என்று கூக்குரலிடுவது எமது பத்திரிக்கையின் நோக்கமன்று. மக்களுள் தன்மதிப்பும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்."

பெரியார் சுற்றுப்பயணத்தில் இருந்தபோது அல்லது கைது செய்யப்பட்ட தருணங்களில் அவரது மனைவி நாகம்மை, சகோதரி கண்ணம்மாள்மற்றும் சகோதரர் ஈ.வி. கிருஷ்ணசாமி வெளியீட்டாளராக இருந்தனர். இது நவம்பர் 5, 1949 அன்று குடி அரசு நிறுத்தப்பட்டது.

சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் மட்டுமின்றி எம். சிங்காரவேலு என்கிற ஆரம்பகால கம்யூனிஸ்ட் தலைவரும் சோஷலிஸம் குறித்து பல கட்டுரைகளை குடி அரசு வெளியிட்டது. மார்க்சும் ஏங்கல்ஸும் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் தமிழாக்கம் செய்யப்பட்டு குடி அரசில் தொடராக வெளிவந்தது

தேசத் துரோகம் செய்கிறது, கம்யூனிசத்தைப் பரப்புகிறது என்கிற குற்றச்சாட்டுகளின் பெயரில் பிரிட்டிஷ் அரசு பல முறை இந்தப் பத்திரிகையைத் தடை செய்தது. 'நான் ஏன் நாத்திகன்' என்ற தலைப்பில் பகத் சிங் எழுதிய புத்தகத்தின் தமிழ்ப் பதிப்பு தடைசெய்யப்பட்டது. அதனை மொழியாக்கம் செய்த ப. ஜீவானந்தம் மற்றும் வெளியீட்டாளர் ஈ.வி. கிருஷ்ணசாமி (பெரியாரின் சகோதரர்) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

குடி அரசின் இறுதி இதழ் நவம்பர் 5, 1949 அன்று வெளியானது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இந்தப் பத்திரிக்கையின் ஒரு சில இதழ்கள் தவிர அனைத்தும் டிஜிட்டல் வடிவத்தில் இருக்கின்றன.

> **மக்களுள் தன்மதிப்பும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்.**

Experimenting Map Cataloguing

with AI technology

R. Prakash, Director Operations (RMRL)
V. Surekha, Cataloguer (RMRL)

Keywords: RDA, MARC21, Dublin Core, Maps, CatalogerGPT, DeepSeek

Map cataloguing was tested in the library as a continuous experimentation with AI technologies. This experiment involves both CatalogerGPT and DeepSeek AI technology. DeepSeek was recently introduced to the world. And also, experiment with multiple metadata schemes namely MARC in Resource Description and Access (RDA) and Dublin Core. There are two standards followed by the cataloguers, the first one is rules for describing the library resources namely books, maps, sound recording etc. Predominantly AACRII cataloguing rules were followed by the cataloguers, now it was replaced by the RDA. The second one is enumerating the library resources into the computer by using the MARC 21 format.

Map cataloguing plays a crucial role in preserving cartographic materials and making them accessible to researchers, geographers, and historians. Since maps differ significantly from books and other library materials, they require specialized cataloguing methods.

Most of the MARC fields are the same as book cataloguing except adding Cartographic Mathematical Data (255) field and additional notes relevant to the map. The MARC formats are standards for the representation and communication of bibliographic and related information in machine-readable form. The 255 field has information on scale, the ratio of map distance to real-world distance (e.g., 1:50,000) and projection, the method used to represent the earth's surface on a flat map.

The below Map image were uploaded into CatalogerGPT and DeepSeek



CatalogerGPT generated a MARC record output

plaintext Copy Edit

```
=LDR  00000cem a2200000 i 4500
=001  [system assigned]
=008  250222s[year]####ii#####g#####000#0#eng#d
=040  \\$aIN-ChRMR$beng$erda$cSACAT
=110  2\$aCourt of Wards (Madras, India),$eauthor,$eissuing body.
=245  10$aSkeleton map of the Madras Presidency :$bshowing the zemindaries under the managemen
=255  \\$aScale 1 inch = 80 miles.
=264  \1$a[Place of publication not identified] :$b[Publisher not identified],$c[Year not ide
=300  \\$a1 map :$bcolor ;$c[Dimensions in cm].
=336  \\$acartographic image$bcri$2rdacontent
=337  \\$aunmediated$bn$2rdamedia
=338  \\$asheet$bnc$2rdacarrier
=500  \\$aIncludes list of zemindaries and demand index.
=650  \0$aZemindaries$zIndia$zMadras Presidency$vMaps.
=650  \0$aLand tenure$zIndia$zMadras Presidency$vMaps.
=650  \0$aCartography$zIndia$zMadras Presidency.
=651  \0$aMadras Presidency (India)$vMaps.
=710  2\$aCourt of Wards (Madras, India),$eissuing body.
=850  \\$a[Holding institution].
=852  \\$a[Location details].
=856  41$u[Link if available].
```

Field 110 is used for a corporate body as the creator, following RDA guidelines.

Field 264 replaces the deprecated 260 field, with indicators distinguishing function (production, publication, distribution).

Fields 336, 337, and 338 describe content, media, and carrier types per RDA rules.

Field 255 specifies the scale of the map.

DeepSeek generated MARC bibliographic output

```
000 00000nam a2200000 i 4500
001 26277
005 20231010
008 231010s1896    ii ab         0   eng
040 ## $a IN-ChRMR $b eng $e rda $c SACAT
245 00 $a Skeleton map of the Madras Presidency : $b showing the Zeminaries under the management
of the Court of Wards for 1804 / $c prepared by the New Office, Madras.
255 ## $a Scale: 1 inch = 60 miles.
264 #1 $a Madras : $b New Office, $c 1896.
300 ## $a 1 map : $b color ; $c 80 x 60 cm.
336 ## $a cartographic image $b cri $2 rdacontent
337 ## $a unmediated $b n $2 rdamedia
338 ## $a sheet $b nb $2 rdacarrier
500 ## $a Includes index of Zeminaries with names, class, and demand.
651 #0 $a Madras Presidency $v Maps.
651 #0 $a India $x Administrative and political divisions $v Maps.
710 2# $a New Office (Madras, India), $e cartographer.
```

Comparison of the MARC fields generated by CatalogerGPT and DeepSeek

MARC Tag	Field Description	CatalogerGPT	DeepSeek	Observation
LDR	Leader	LDR 00000cem a2200000 i 4500	00000nam a2200000 i 4500	CatalogerGPT correctly identifies the material as cartographic, while DeepSeek considered as a textual
008	Fixed Data Elements	250222s[year]####ii#####g#####000#0#eng#d	231010s1896 ii ab 0 eng	CatalogerGPT uses the date of creation while DeepSeek provides a random date of record creation
110	Main Corporate Author	$aCourt of Wards (Madras, India),$eauthor,$eissuing body.		CatalogerGPT based RDA correctly described whereas DeepSeek omits this field.
245	Title Statement	$aSkeleton map of the Madras Presidency :$bshowing the zemindaries under the management of the Court of Wards for Fasil 1304	$aSkeleton map of the Madras Presidency :$b showing the zeminaries under themanagement of the Court of Wards for Fasil 1804 $c prepared by New Office, Madras.	Both CatalogerGPT and DeepSeek transcribe the title as it in the map, but there is problem with OCR in DeepSeek
255	Cartographic Scale	$aScale 1 inch = 80 miles	$aScale: 1 inch = 60 miles.	DeepSeek provides an incorrect scale value
264	Production, Publication, Distribution,Manufacture, and Copyright Notice (R)	$a[Place of publication not identified] :$b[Publisher not identified],$c[Year not identified]	$a Madras : $b New office, $c 1896.	CatalogerGPT failed to identify the publication details. DeepSeek provides publication details correctly.
300	Physical Description	$a1 map :$bcolor ;$c[Dimensions in cm].	$a 1 map : $b color ; $c 80x60 cm.	DeepSeek includes specific dimensions (80x60 cm), whereas CatalogerGPT leaves a placeholder for enter the data
336	Content type	$acartographic image$bcri$2rdacontent	$acartographic image $b cri $2 rdacontent	
337	Media type	$aunmediated$bn$2rdamedia	$aunmediated $bn $2 rdamedia	

338	Carrier type	$asheet$bnc$2rdacarrier	$asheet $bnb $2 rdacarrier	
500	General Notes	$aIncludes list of zemindaries and demand index.	$aIncludes index of zemindaries with names, class and demand.	Both provide notes, but DeepSeek includes additional information on names and class, which improves searchability.
650	Subject Heading	$aZemindaries$zIndia$zMadras Presidency$vMaps	Not present	DeepSeek fails to provide a subject heading
650	Subject Heading	$aLand tenure$zIndia$zMadras Presidency$vMaps	Not present	DeepSeek fails to provide a subject heading.
650	Subject Heading	$aCartography$zIndia$zMadras Presidency	Not present	DeepSeek fails to provide a subject heading.
651	Genre/Form	$aMadras Presidency (India)$vMaps		
710	Added Corporate Entry	$aCourt of Wards (Madras, India),$eissuing body.	$a New office (Madras, India), $e cartographer.	Both provides incorrect data

ChatGPT Generated Dublin Core (DC) schema

Title	Skeleton Map of the Madras Presidency
Alternative Title	Showing the Zemindaries under the Management of the Court of Wards for Fasil 1304
Creator	Court of Wards (Madras, India)
Subject	Zemindaries—India—Madras Presidency—Maps; Land tenure—India—Madras Presidency—Maps; Cartography—India—Madras Presidency
Description	A historical map depicting the zemindaries under the management of the Court of Wards in the Madras Presidency for Fasil 1304. Includes a demand index.
Publisher	[Not identified]
Date:	[Not identified]
Format	Image/jpeg (or Physical Map if referring to original)
Type	Cartographic Material
Identifier	[Unique identifier if available]
Language	English
Relation	
Coverage	Madras Presidency, India
Rights	[Usage rights/license if known]

While experimenting this time we found that if we train more and more samples into AI based systems. We will get more accurate results. One instance the CatalogerGPT failed to recognize the data due to error in reading the OCR. Our experience shows that CatalogerGPT is currently the best option for generative AI tools for MARC records cataloguing irrespective of library resources.

தமிழின்பம்

தமிழில் முதல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

சு. முத்து மாலதி, உதவி இயக்குநர் (RMRL)

முதன்மைச் சொற்கள்: சாகித்திய அகாதெமி, தமிழின்பம், தமிழ் நாவல், சேதுப்பிள்ளை, விருது

இந்திய மொழிகளில் வெளியான இலக்கியங்களையும், எழுத்தாளர்களையும் அங்கிகரித்து இலக்கியங்களை பாதுகாத்தல், சிறந்த எழுத்தாளர்களுக்கு விருது வழங்குதல், இலக்கியங்களை மொழிபெயர்த்து மற்ற மொழிகளுக்குக கொண்டு சேர்த்தல், கலாச்சாரத்தை விரிவு படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது சாகித்திய அகாதெமி. 1954ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இந்நிறுவனம் சிறந்த இலக்கியங்களுக்கு விருதுகளையும் வழங்கிவருகிறது.

தமிழ் மொழியில் கட்டுரைகள், புதினம், பயணக்கட்டுரை, வாழ்க்கை வரலாறு, இலக்கிய விமர்சனம், இலக்கிய வரலாறு, சிறுகதைகள், கவிதை என பல துறைசார்ந்த நூல்களுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்துள்ளது.

தமிழின்பம்

ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான தமிழின்பம் என்ற நூலுக்கு 1955 ஆண்டு தமிழுக்கான முதல் சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. இந்நூலின் முதல் பதிப்பு 1948ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. புதுவை நியூ இந்தியா புக் ஹவுஸால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கு சுத்தானந்த பாரதி அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார்.

முதல் பதிப்பில் தமிழையும் இன்பத்தையும் பிரிக்கமுடியாது என்பதை விளக்கும் வகையில் அதன் தலைப்பை தமிழின்பம் என்றே சேதுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இப்பதிப்பில் மேடைப் பேச்சு, இயற்கை இன்பம், சிலம்புச் செல்வம், அறிவும் திருவும், கற்பனைக் கட்டுரை, மொழியும் நெறியும், உருப்படிவ ஒற்றுமை, ஆட்டும் பாட்டும், பாரதியார் பாட்டின்பம் என ஒன்பது தலைப்புகளில் 30 கட்டுரைகள் உள்ளன. அவற்றில் சில வருமாறு: 1-3-1946ல் நடைபெற்ற தமிழாசிரியர் மாநாட்டின் தலைமை உரை, சென்னையில் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் நடத்தப்பட்ட புறநானூறு மாநாட்டுத் தலைமையுரை, 1-6-1947ல் மதுரையில் நடைபெற்ற வேளாளப் பெரு மக்கள் மாநாட்டின் திறப்புரை, பொங்கலோ பொங்கல், சித்திரை



தமிழின்பம்

S. Rama Krishnan

R. Maragatham.

ஆசிரியர்

ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்

சென்னைப் பல்கலைக் கழகம்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 10
P.M.DIST. INDIA

விற்பனை உரிமை:

நியூ இந்தியா புக் ஹவுஸ்

இராமச்சந்திரபுரம் (P. O.)

திருச்சி ஜில்லா.

ரூ. 3—0—0

பிறந்தது, சிலம்பின் காலம், தமிழும் சைவமும் என கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நூலின் முகப்பு பக்கத்தின் பின் பகுதியில் Paper supplied by the author என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தால் ஆசிரியரே இந்நூலுக்கு காகிதம் வாங்கிக் கொடுத்துள்ளதை அந்தக் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது,



18-4-55_இல் சென்னை அண்ணாமலை மன்றத்தில் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்களுக்கு நிகழ்ந்த பாராட்டுக்கூட்டம்

1948 ஆம் ஆண்டுக்குப் பிறகு நூலின் பல பதிப்புகள் வெளிந்துள்ளன. ஆனால் அவற்றில் முதல் பதிப்பின் முன்னுரை என்று சுத்தானந்த பாரதி அவர்களின் முன்னுரையுடன், தலைப்புகளில் சில மாற்றங்களுடன் மேடைப் பேச்சு, இயற்கை இன்பம், காவிய இன்பம், கற்பனை இன்பம், அறிவும் திருவும், மொழியும் நெறியும், இருமையில் ஒருமை, பாரதியார் பாட்டின்பம் ஆகிய தலைப்புகளில் 40 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

விருதும் பாராட்டும்

தமிழின்பம் நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது கிடைத்ததைக் கொண்டாடும் விதமாக 18-4-1955 அன்று சென்னை அண்ணாமலை மன்றத்தில் சேதுப்பிள்ளையவர்கட்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. காமராசர் அவர்கள் சேதுப்பிள்ளையவர்களுக்கு பொற்பதக்கம் அணிவித்து தமிழ் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் எல்லாம் வழங்கியவர் என்று பாரட்டியுள்ளார்.

 சேதுப்பிள்ளை அவர்கள் பேசும்பொழுது "தமிழின்பம் என்னும் இப்புத்தகம் ஐந்தாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது, மூன்று பதிப்புகள் வெளியாகி விட்டன. நல்ல தமிழைக் குடிமக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். அதை ஏற்று அவர்கள் சார்பாகத் திரு. காமராசர் அவர்கள் இப்பதக்கத்தை எனக்கு அளித்தார்கள். இந்நூல் தமிழ்மக்கள் பெற்ற பரிசு என்று கருதுகின்றேன்," என்று கூறியுள்ளார், (செந்தமிழ்ச் செல்வி, மே 1955, பக். 389-394).

நடன நாடக ஜோடி நடராஜ்-சகுந்தலா

சே. தனபால், ஆய்வாளர், RMRL

முதன்மைச் சொற்கள்: நடனம், நாடகம், நடனகலா நிலையம், கலை, சிறுநூல்



நவீன கலை இயக்கத்தின் பிதாமகனாகக் கருதப்படுபவர் சிற்பி எஸ். தனபால். அவர் சிற்பக் கலையோடு, சிறந்த நடனக் கலைஞராகவும் திகழ்ந்தார். அவருக்கு நடனக்கலையில் ஈடுபாடு வரக் காரணமாக இருந்தவர்கள் நடராஜ்-சகுந்தலா குழுவினர். குறிப்பாக நடராஜின் நடனம் பார்த்து, உத்வேகம் பெற்று நடனம் கற்றுக் கொண்டதாக தனபால் குறிப்பிட்டுள்ளார். பின்னர் நடராஜ்-சகுந்தலா குழுவின் நடனகலா நிலையத்தில் இணைந்து நடன நாடகத்தை நிகழ்த்தியுள்ளார். அங்கு நடனத்தோடு சேர்ந்து ஆடை அலங்காரங்களை கவனிக்கும் பொறுப்பிலும் சிறிது காலம் செயல்பட்டார் தனபால். நடராஜ்-சகுந்தலா நிகழ்த்திய 'புத்தர்' என்ற நடன நாடகத்தில், புத்தரின் சிலையைப் போன்ற ஒரு வடிவத்தையும் அதன் தலையின் பின்னால் ஒளிவட்டத்தையும் தனபால் உருவாக்கினார். அவரின் வேலைப்பாடு அற்புதமாக இருந்ததால், நடராஜ்-சகுந்தலா குழுவினர் அவரை, 'சித்திரம் தனபால்' என்று புகழாரம் சூட்டினர். பின்னாளில் தனபால், நடனகலா நிலையத்தில் இருந்து விலகி, சொந்தமாக ஒரு குழுவை உருவாக்கினார் என்பது வேறு கதை.

யார் இந்த நடராஜ்–சகுந்தலா? அவர்கள் வெளியிட்ட 'நாட்டியம்' என்ற சிறுநூலின்வழி இதைக் காணலாம். நடராஜ்–சகுந்தலா, தங்களது நிறுவனமான நடனகலா நிலையத்தின்வழி 1946ஆம் ஆண்டு அவர்களைப் பற்றிய 'நாட்டியம்' என்ற சிறுநூலை வெளியிட்டுள்ளனர். இதன் விலை ரூ. 2. இந்நூல் Gordon & Co அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 16 பக்கங்கள்.

நடனகலா நிலையம்

1940களில் நடராஜ்–சகுந்தலா என்ற நடன ஜோடி, பல்வேறு நடன நாடகங்களைத் தமிழ்நாட்டிலும் மற்ற இடங்களிலும் நிகழ்த்தி வந்தனர். அவர்களின் அரங்க அமைப்பு, ஆடை அலங்காரங்கள், ஆபரணங்கள் உள்ளிட்டவையும் நடனத்தில் வெளிப்படும் முகபாவனைகள், அசைவுகள் முதலியவையும் அவர்கள் பயன்படுத்தும் இசையும் காண்போரையும் கேட்போரையும் கவரும்படி அமைந்திருந்தன.

இவர்கள் ஒரே வகையான நடன வடிவங்கள் அல்லாமல் கதம்ப வடிவிலான நடனத்தைத் தங்களது மேடைகளில் நிகழ்த்தி வந்துள்ளனர். அவர்களின் நடன நாடகத்தில் பரத நாட்டியம், கதகளி, மணிபூரி என பல நடன வடிவங்களும் தென்னாட்டுச் சிற்ப தோற்றங்கள், அஜந்தா சித்திர அலங்காரங்களின் பிரதிபலிப்புகளும் வெகுஇயல்பாக வெளிப்பட்டன. இவர்கள் ஒரே பாங்கிலான


சகுந்தலா-நடராஜ்

கதைகளையோ, நடனங்களையோ தொடர்ந்து நிகழ்த்துவதில்லை என்பதை அவர்கள் நிகழ்த்திய நடன நாடகங்களின் தலைப்புகளைக் கொண்டே அறியலாம். அவர்கள் தங்களது நடன நாட்டியத்தில் பன்மைத்தன்மையை வெளிபடுத்தி வந்துள்ளனர் என்பதும் முக்கியமானது.

நாட்டியம்' சிறுநூல்

பதிப்புரை போன்று அமைந்துள்ள இந்நூலின் தொடக்கப் பக்கத்தில் நடனகலா நிலையம், 'நாட்டியம்' என்பதைப் பின்வருமாறு வரையறுக்கிறது.

நிர்வாணம்

சிவசக்தி நடன நாடகம்

நடராஜ்-சகுந்தலா நிகழ்த்திய நடன நாடகங்கள் சிலவற்றின் தலைப்புகள் பின்வருமாறு;

1. சிவ சக்தி
2. சாகுந்தலம்
3. கார்த்திகேய தாண்டவம்
4. ருக்மணி கல்யாணம்
5. நிர்வாணம்
6. ஆண்டாள் திருக்கல்யாணம்
7. பாம்பாட்டி
8. பஸ்மாசூர மோஹினி
9. புத்தா
10. சப்த தாண்டவம்
11. பெரியாழ்வார்
12. செம்படவன்

கார்த்திகேய தாண்டவம்

"இயற்கையின் ஒவ்வொரு வெளிப்பாடும் நாட்டியத்தின் தத்வம் கொண்டிருக்கிறது. எனினும், அறிவுள்ள மனிதன்; பகுத்தறிவுள்ள பண்பாளன் ; காட்சிப் பொருளின் கவிதைமயமான கலைஞன்; தனது செய்கை மூலம் தெய்வத்தை தீண்டும், ஜீவனை அடக்கியாளும் சிற்சபைக் கனவுதான் நாட்டியம்!"

தற்காலத்தில் ஒரு நிறுவனம் அல்லது ஒரு குழுவைப் பற்றி வெளியிடப்படும் Brochure போன்ற தன்மையில் அந்தச் சிறுநூலில் இடம்பெற்றிருப்பவை பின்வருமாறு,

1. நடராஜ்-சகுந்தலா குழுவினர் நிகழ்த்திய நடன நாடகங்களின் குறிப்புகளும் அதன் சிறப்பம்சங்களும்
2. அந்த நடன நாடகங்களின் புகைப்படங்கள்
3. பத்திரிகை, இதழ்கள் உள்ளிட்டவற்றில் வெளிவந்த அவர்களைப் பற்றிய மதிப்புரைகள்
4. நடனகலா நிலையக் குழுவினரின் புகைப்படங்கள்
5. அப்போது தயாரிப்பில் இருந்த நடன நாடகங்கள் பற்றிய குறிப்புகள்
6. விளம்பரங்கள்

இந்தச் சிறுநூலில் நடராஜ்-சகுந்தலா, தங்களைப் பற்றி கூறும் இடத்தில்,

"தமிழகத்திலே 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்னும் காவியத்தில் புதையலெனப் பொதிந்த நற்செல்வப்பெருமை மிக்க நாட்டியக்கலைக்கு எங்களால் இயன்ற சேவை

செய்யத் துணிந்தோம்.... ஒற்றுமை பெற்று உண்மைக்கலையின் சக்தியால் கட்டுண்டிருக்கும் தம் பாரதத்தாயின் அடிமைத் தளையை தகர்க்கவேண்டாமா? இவற்றைக்கோரி யே எமது கலைத்தொண்டு, இதற்காகத்தான் எங்கள் ஆவி வாழ்க்கை”

என்று தங்களது நடன நாடகத்தின் பின்புலம் என்பது ஒருவகையில் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது என்பதைத் தெரிவிக்கின்றனர். அதே நேரத்தில் சிலப்பதிகாரத்தில் இருப்பதை வெளிப்படுத்துவதாகக் கூறி பண்டைய தமிழ்ப் பண்பாட்டு மரபின் ஒருபகுதியாகயும் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.

இதழ்களில் ‘நடராஜ்-சகுந்தலா’ ஜோடி குறித்து

அன்றைய நாட்களில் வெளிவந்த பத்திரிகைகளும் இதழ்களும் நடராஜ்-சகுந்தலா ஜோடி குறித்தும் அவர்களின் நடன நாடகங்கள் குறித்தும் மதிப்புரைகளை வழங்கின. ‘நாட்டியம்’ சிறுநூலில் இடம்பெற்ற சிலவற்றை இங்கு காண்போம்.

“நடன காட்சிகளுக்கு அத்தியாவசியமான தேக அமைப்பை நடராஜும் சகுந்தலா ஆகியவர்கள் பெற்று இருக்கிறார்கள். நடன தோற்றங்களில் அவர்களைப் பார்த்தால் சிற்பி அமைத்த விக்கிரகம் மாதிரியே இருக்கிறது.”

என்று கல்கி இதழ் தெரிவித்துள்ளது. 'ஆண்டாள் திருக்கல்யாணம்' நாடகத்தில் ஆண்டாளாக நடித்த சகுந்தலா மேடைக்கு வந்ததுமே சொர்ணத்தால் செய்யப்பட்ட சிற்ப உருவம் உயிர் பெற்றுவிட்ட பிரமை உண்டானது' என்றும் "நிர்வாணம்' நாடகத்தில் நடராஜ் சாந்த பாவ கட்டத்தில் பார்ப்பவரைக் கண்ணீர் விட செய்துவிடுகிறார்' என்றும் ஆனந்த விகடன் கூறியுள்ளது. இத்துடன், "நடனக்கலையில் அடைந்திருக்கும் வெற்றிக்கு இவர்கள் (நடராஜ்-சகுந்தலா) அனுஷ்டித்துவரும் சில புத்திசாலித்தனமான கொள்கைகளும் காரணம் என்று சொல்லவேண்டும், பிரசித்திபெற்ற நடனக்காரர்களை இவர்கள் காப்பி அடித்து நம்மை அலுப்படையச் செய்வதில்லை. புதிது புதிதான சரித்திரங்களை எடுத்துக்கொண்டு அவற்றை வெகுனூதனமாக ஆடிக்காண்பிக்கிறார்கள்."

என்று குறிப்பிட்டுள்ளது ஆனந்த விகடன். 'பாரத தேவி' பத்திரிகை, இவர்களின் நடன நாடகத்தில் 'வெகு சுகமான இனிமையான ஆர்செஸ்டிரா (கோஷ்டி வாத்யம்) இடம்பெற்றிருப்பதோடு, இவர்கள் ஆடைகளுக்கும் அரங்க அமைப்பிற்கும் அதிகமாக செலவு செய்வதாகத்' தெரிவிக்கிறது. நாரதர் இதழின் ஆசிரியர் டி. ஸ்ரீனிவாச ராவ், 'உடை, ஆபரணம், நடனத்திற்கான கதைகள் ஆகியவற்றைத் தெர்ந்தெடுக்கும் விஷயத்திலிருந்து, ஒவ்வொன்றிலும் நவீன முறையையே பற்றி வருகிறார்கள்' என்று கூறியுள்ளார்.

கொழும்புவைச் சேர்ந்த வீரகேசரி பத்திரிகை, 'நாடக அம்சமுங்கொண்ட நாட்டியத்தில், சினிமாக் கலையின் சில நவீன நுட்பங்களையும் வெற்றிகரமாக நடராஜ்-சகுந்தலா குழுவினர் கையாளுகின்றனர்' என்றும் 'விதவிதமான வர்ண ஒளி எழுதிய ஓவியம், பின்னணி படுதாக்களின் பூரித்த 'மேடைக் கவர்ச்சி' சப்தம் பின்னிய ஜாலம், வேஷக்கலை (மேக் - அப்)

பூசிய 'சௌந்தர்யத்திலே' இவையாவும் அவர்களது நடனத்திற்கு ஓர் அலாதியான ' கந்தர்வ-ஜீவனை' அளிப்பதோடு, கண்ணைக் கவரத்தக்க நவீன பெருமையும் கொடுக்கின்றன' என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதழ்கள், பத்திரிகைகள் வெளிப்படுத்தும் இத்தகைய மதிப்பீடுகள் அவர்களின் நடன நாடகங்கள் எத்தகைய தன்மையில் அமைந்திருக்கும் என்பதை ஊகித்து அறிய உதவுகின்றன.

இறுதியாக

நடராஜ்–சகுந்தலா ஜோடியின் நடன நாடகங்கள், அக்காலத்தில் நிலவிய மரபார்ந்த நாடக முறைகளில் இருந்து பிரிந்து, நவீன முறைகளைப் பயன்படுத்தி, புதியவற்றிற்கு வழிவகுத்துள்ளனர் என்பதை பத்திரிகை, இதழ்களின் மதிப்புரைகள் வழி அறியமுடிகிறது. அவர்கள் இந்து புராணக் கதைகளோடு தங்களை அடக்கிக் கொள்ளாமல், 'செம்படவன்', 'நிர்வாணம்', 'புத்தா', 'பாம்பாட்டி' எனத் தங்களது நடன நாடகங்களைப் பன்முகத் தன்மையில் நிகழ்த்தி உள்ளனர். பின்னாளில் தமிழ்நாடு அரசு இவர்களுக்கு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. மேலும், நடராஜ்-சகுந்தலா இயக்கிய சப்த தாண்டவம் என்ற நாடகத்தை மீள்உருவாக்கம் செய்ய நடனக் கலைஞர் எம். கே. சரோஜா 1976 ஆம் ஆண்டு பண்பாட்டுத் துறையின்மூலம் மானியம் பெற்றார்.

இந்தியாவின் நடன நாடக வரலாற்றில் தங்களுக்கென்று தனி இடத்தைக் கொண்டவர்கள் நடராஜ்–சகுந்தலா. அவர்கள் உருவாக்கிய 'நாட்டியம்' என்ற சிறுநூல் அவர்களைப் பற்றிய பெரும் வரலாற்றுக்கு ஒரு சிறு நுழைவாயிலாக அமைந்திருக்கும் அதேநேரத்தில் அவர்களைப் பற்றிய ஒரு அரிய பொக்கிஷமாகவும் உள்ளது.

இதுபோன்ற பல அரிய நூல்களை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் பாதுகாத்து வருகிறது.

MARCH 2025 |VOL.2, ISSUE NO. 3

A brief summary on the talk by Prof. Raj Mutharasan

Bama Muthuramalingam, Engineer and Heritage enthusiast

Keywords: Ancestry, Genetics, Indus Research, Genome Mapping, DNA

Prof. Raj Mutharasan

Indus Research Centre of the Roja Muthiah Research Library invited Prof. Raj Mutharasan, a highly accomplished researcher and educator from Atlanta, USA to speak on **Exploring Indian and Tamil Ancestry Through Genetics: Methods and Recent Findings**. This event happened in RMRL premises on 14 February 2025 as part of Prof. M. Anandakrishnan Endowment Lecture. It was a packed house with dignitaries like Artist Trotsky Marudu, Prof. Arasu, Prof. Ra. Selvakumar, FeTNA members, students, enthusiasts, and scholars from allied fields. Dr. Sundar Ganesan, director of RMRL welcomed Prof. Raj Mutharasan, Mrs. Karpagavalli Mutharasan and everyone to the lecture. Mr. R. Balakrishnan, honorary consultant of Indus research centre introduced Prof. Mutharasan formally and invited him to deliver the lecture.

Prof. Mutharasan started the lecture with a disclaimer stating that he is just a learner for about twenty years and not an expert in the genetics field. But with his profound knowledge, he had kept everyone spell-bounded during the entire one hour.

Talk started with the available 10,000+ ancient DNA samples across the world which help to identify human ancestry. Unfortunately, only one ancient genome from Rakhigarhi has been identified so far in India. He introduced genetic markers: Y Haplogroup which determines the paternal lineage and mitochondrial DNA (mtDNA)

which determines maternal lineage. Most ancient Y Haplogroup found in India is C-M130 and Andamanese Onge and Jarwa tribes have D-M174. Other predominant Y Haplogroups found in India includes F-M89, K, L, R. mtDNA groups widely present in India are M, R (a subclaude of N), U.

Prof. Mutharasan had discussed several peer reviewed research papers to illustrate the genetic ancestry of Indians ad Tamils. Throughout the lecture, he showed a high scientific rigour at the same time he also highlighted the important results for a common man in a very simple language. Main results discussed by him are as follows:

- 1000 genome project showed that predominant mtDNA Haplogroup among Indians M, R, and U.
- Anthropological Survey of India (AnSI) studied mtDNA across the tribal population. Western and Central India tribes have M2 frequencies ranging from 10-50% whereas in south India high frequencies of M2 is found: Urali Kuruman has 100%, Toda 75%, Alu Kurumba 74%, Betta Kuruba 57%, Jenu Kuruba 6%, Irular 5%.
- Vital et al had performed mtDNA analysis of four ancient skeletons excavated in Mesopotamia which showed that these samples contain residues of mtDNA (M49, M61, M4b, M4b1, M65a) of Indians not Mesopotomia.
- Shinde et al analysis showed that Rakhigarhi ancient DNA sample is an admixture of mtDNA U Haplogroup from the Iranian Hunter gatherers and South East Asian Andamanese mtDNA.
- Reich et al showed that large scale migration of Steppe ancestry had brought Indo—European language into India and their migration path is via Eurasia Central Asia BMAC Hindukush mountains India during second millennium BC.
- Pathak et al have collected 165 random samples across Eurasia, China, Iran, Srilanka and India to identify the Y Haplogroup genetic distribution. Majority of South Indian, Srilankan Tamil have Haplogroup L ancestry when traced back has Y haplogroup of L1a1 L1a L1 -M22 which belong to IVC and neolithic West Asia people.
- About one third of the Jat community has Y Haplogroup L- M27 (IVC) in an experiment conducted with 302 people. There are also other Y Haplogroups like Q, R, T, G, H, I, J present which says this community has very diverse and blended genetic map.
- Pitchappan et al has collected 1680 samples from 12 tribal population and 19 non-tribal population in Tamil Nadu. Predominant Y Haplogroups includes F, H, R1, R2 with L of about 3% and C being 0.3%.
- Another genetic study on south Indians shows the following Y Haplogroup distribution: C – 3.4%, F – 10%, L – 13%, H – 20.9%, R1a1 – 26.7% and R2 - 10.6%. In Tamil Nadu and Andhra, mDNA Haplogroup M is dominant of about 62% and U Haplogroup is present in Tamil Nadu.
- In Gujarat Tribal population, nearly 54% of the Y Haplogroups belong to pre-2000 BCE and 19% post – 2000 BCE. In this tribe, IVC Haplogroup L as well as Aryan Haplogroup R1a1 are found which indicates people have lived harmoniously across many migrations.

He then presented an interesting part of the talk which is his own DNA trajectory. His DNA results show that he has been genetically related to two in Pakistan, two in Gujarat, one from Maharashtra, one from Hyderabad, several from TN, Fiji, Trinidad, Vietnam. His genetic trajectory shows that the migration of his ancestors from Indus region to Tamil Nadu through Gujarat and Maharashtra. This trajectory is very much along the results of Mr. Balakrishnan IAS' research on the journey of a civilization: Indus from Vaigai.

Finally, Prof. Mutharasan summarised the following: Folks in India are a blended population of various origin and claim of purity does not stand true. Tamil ancestry is possibly non-R1a ancestry. Mother tongue and genetics hold no correlation.

RMRL always conducts lectures on pioneering fields and this particular talk is a big value add to their Indus Research Centre. When Archaeology, Linguistics and Genetics come together, understanding of human ancestry gets a new light and history gets redefined. Professor in his concluding remark said, What is true today may not be true tomorrow scientifically!

Upcoming events at RMRL

07 - 03 - 2025, 5.30 pm : அகஸ்தியர் - ஒரு மீள்பார்வை
திரு. ஆர்.பாலகிருஷ்ணன் (சிந்துவெளி ஆய்வு மையம்)

22 - 03 - 2025, 5.30 pm : Subramania Bharati and the Progressive Literary Magazines in Tamilnadu, 1950-1970
Dr V. Rajesh (Associate Professor and former Head of the Department, IISER Mohali)